# அழுக்குப்படாத அழகு நாடகத்தின் சமுதாயப் பார்வை

**அபிதா ந. சொ**
**உதவிப் பேராசிரியர்**
**புனித அல்போன்சா கலை மற்றும் அறிவியல் கல்லூரி,**
**சூசைபுரம் கருங்கல், கன்னியாகுமரி மாவட்டம்.**

60

**ஆய்வுச் சுருக்கம்**

பல்வேறு உணர்ச்சிக் கூறுகளின் மொத்த வடிவம் தான் மனிதன். வாழ்கையின் நிகழ்வுகளுக்கு ஏற்ப அவனது மன உணர்ச்சிகள் மாறுகின்றன. அழுகிறான், ஆனந்தப்படுகிறான், அச்சம் கொள்கிறான். சில வேளைகளில் ஆக்ரோஷமும் ஆவணமும் கொள்கிறான். தேவையற்ற மன உளைச்சல்களை சமப்படு மட்டத்தி அவனை ஆற்றுப்படுத்துவது இலக்கியங்களே. அதிலும் சிறப்பாக நாடகங்கள் மனித மனங்களைப் பக்குவப்படுத்துவதில் பெரும்பங்கு வகிக்கின்றன. ம.கமலவேலன் எழுதிய அழுக்குப்படாத அழகு நாடகத்தில் வரதட்சணை கேட்கும் சமூகத்திற்கு பெண் கொடுக்க கூடாது என்று சமூகத்தில் மாற்றத்தை உருவாக்கும் சமுக செய்தி நாடகமாக்கப்பட்டுள்ளது. அடுத்ததாக தெருத்தெருவாக கீரை விற்கும் பெண்ணை கிள்ளுக்கீரையாக நினைக்கும் சமூகத்தை பற்றியும் வேலைக்கு செல்லும் ஏழை பெண்களின் குழந்தைகளை பாதுகாக்க காப்பகம் கட்டவேண்டுமென்ற பொதுநல பார்வையும் நடைப்பாதை நம்பிக்கை நட்சத்திரம் என்ற நாடகத்தில் முன் வைக்கிறார் ஆசிரியர். தங்க வயல் என்ற கிராமத்தில் நடக்க கூடிய பல்வேறு சிக்கல்களை கதாநாயகன் தீர்த்து வைக்கிறான். அவனது பொதுநல பண்பை உறவு பின்னல்கள் என்ற நாடகத்தில் ஆசிரியர் வெளிப்படுத்தியுள்ளார். ம.கமலவேலன் எழுதிய மூன்று நாடகங்களும் சமூகத்தில் நடக்ககூடிய யதார்த்த செய்தியை முன் வைக்கின்றன.

**திறவுக்கோல் -** அழுக்குப்படாத அழகு, சமூகம் ம. கமலவேலன்

**முன்னுரை**

தமிழ் இயல்இசை நாடகம் என்று மூன்றாகப் பகுத்துக் கூறப்படும். தொல்காப்பியம்

“ நாடக வழக்கினும் உலகியல் வழக்கினும்

பாடல் சான்ற புலநெறி வழக்கம்”

என்று அகத்துறை இலக்கியங்கள் நாடகமாக அமைதலைக் கூறுகிறது. இதன்கண் இடம்பெற்றுள்ள மெய்ப்பாட்டியற் செய்திகள் நாடகத்திற்கு உரியனவாகவே காணப்படுகின்றன. ஆற்றுப்படை இலக்கியத்தை விவரிக்கும் இடத்திலும் கற்பிற்கு உரிய மாந்தரை விவரிக்கும் இடத்திலும் கூத்தர் என்ற சொல்லைத் தொல்காப்பியம் கூறுகிறது. சங்க இலக்கியங்களில் அகப்பாடல்கள் யாவும் தனிமொழி நாடகமாகவோ இருவர் உரையாடும் நாடகமாகவோ காணப்படுகின்றன. இந்த நாடக இயல்பினைக் கலித்தொகைப் பாடல்கள் சில சிறப்பாகக் கொண்டுள்ளன.

சிலப்பதிகாரம் முத்தமிழ்க் காப்பியம் என்பது வழக்குரை காதை வெளிப்படையாகவே ஒரு குறுநாடகமாக அமைந்துள்ளது. இந்நூலுக்கு உரை எழுதிய அடியார்க்கு நல்லார் பரதம் அகத்தியம்

முறுவல் சயந்தம் செயிற்றியம் குணநூல் பஞ்சமரபு பரத சேனாபதியம் மதிவாணர் போன்ற நாடகத்தமிழ் நூல்கள் இருந்தன. அவை அழிந்தன என்று குறிப்பிடுகிறார். அவரே நாடகத்தின் இலக்கணம் சிலவற்றையும் எடுத்துரைக்கிறார். நாடக மேடையின் அமைப்பு திரைச்சீலைகளின் இயல்பு போன்றவற்றையும் விவரிக்கிறார்.

**சமூக நாடகம்**

நாடகம் பொழுது போக்கிற்கு மட்டுமன்றிச் சமூகத்திற்கு உதவுவதும் என்ற உணர்வு சமூக நாடகங்களின் வளர்ச்சிக்கு வழிகோலியது. சமூக நாவல்கள் பல சமூக நாடகங்களாக ஆக்கப்பட்டன. தேசிய உணர்வு முளைவிட்டு பரப்பப்பட வேண்டிய சூழலில் சமூக நாடகங்கள் மேலும் வளர்ச்சி பெற்றன. அத்துடன் புராண இதிகாச நாடகங்களிலும் கூட சமூகக்கருத்துகள் ஊடாடின. விடுதலைக்குப் பின் சமூக நாடகங்கள் மேலும் பெருகின. சமுதாயம் பற்றிய பொதுவான கருத்துகள் நாடகங்களில் இடம் பெற்றன. நடுத்தர வர்க்கத்தினரின் சிக்கல்கள் வெளியிடப்பட்டன. தமிழ் சமூகத்தின் சிக்கல்கள் பேசப்பட்டன. சமூகப் பழக்கவழக்கங்கள், பெண்களின் நிலை, அதிகார வர்க்கம், சாதிச்சிக்கல், மனவுறுதி போன்றவை சமூக நாடகங்களின் மையக்கருத்தாக உருவாக்கப்பட்டுள்ளன.

**சமூக நாடக எழுத்தாளர் மா.கமலவேலன்**

அழுக்குப்படாத அழகு என்ற நூலின் ஆசிரியர் மா.கமலவேலன். இவர் திண்டுக்கல்லைச் சேர்ந்த தமிழ் எழுத்தாளர். இந்திய மத்திய அரசின் பாலசாகித்ய புரஸ்கார் விருது ‘அந்தோணியின் ஆட்டுக்குட்டி’ என்ற சிறுவர் நூலுக்கு கிடைத்துள்ளது. 1961 ஆண்டு இருந்து தொலைக்காட்சி மற்றும் வானொலி ஊடகங்களின் வழியாகப் பல நாடகங்களை தந்தவர். இவர் படைத்த அழுக்குப்படாத அழகு எனும் நாடக நூலில் மனித மனங்களின் பின்னல்களை நயம்பட உரைத்துள்ளார். இந்த நாடகத் தொகுப்பில் வரதட்சனை கேட்கிற வர்க்கத்திற்கு யாரும் பெண் கொடுக்கக் கூடாது என்ற புரட்சி செய்தியை அழுக்குப்படாத அழகு என்ற நாடகத்தில் முன் வைக்கிறார். தெருத் தெருவாகக் கூவி கீரை விற்கும் ஏழைப் பெண்ணின் மனநிலையை நடைப் பாதை நம்பிக்கை நட்சத்திரங்கள் என்ற நாடகத்தில் கூறியுள்ளார். சாதி மதம் கடந்து பிறருக்கு உதவி செய்ய வேண்டும் என்ற செய்தியை உறவுப் பின்னல்கள் நாடகத்தின் வழி மக்களுக்கு கூறுகிறார். இவ்வாறு சமுதாயத்தில் நடக்கும் யதார்த்த நிகழ்வுகளை எளிய நடையில் எடுத்துக் கூறி மக்கள் மனதில் இடம் பிடித்துள்ளார், நம் நாடக ஆசிரியர்.

**சமுதாய பழக்க வழக்கம்**

ஒரு குறிப்பிட்ட நிலப்பகுதியில் நீண்ட காலமாக ஒன்று சேர்ந்து வாழ்வதற்கான மக்கள் கூட்டம் ஏற்படுத்திக் கொள்ளும் அமைப்பே சமுதாயமாகும். ஒரு சமுதாயத்தில் வாழும் மக்களின் வாழ்க்கை அமைப்பு முறையின் வெளிப்பாடே பண்பாடாகிறது. தனிமனிதனின் செயல்கள் தொடர்ந்து அவனால் செய்யப்பட்டு வரும்போது நாளடைவில் இது பழக்கமாகிறது. தனி மனிதன் ஒருவன் பழகிப்போன முறையில் திரும்பத்திரும்ப செய்துவரும் ஒரு குறிப்பிட்ட செயலைப் பல மனிதர்கள் ஒன்றாக சேர்ந்து செய்கின்ற பொழுது அது வழக்கம் என போற்றப்படுகிறது. அழுக்குப்படாத அழகு நாடகத்தில் மூத்த பெண்ணுக்குத் திருமணம் முடிந்த பிறகு தான் இளைய பொண்ணுக்குத்

திருமணம்செய்யும் வழக்கம் இருந்ததை அறியலாம். இதனை “மூத்தவளை வச்சுட்டு இளையவளை எப்படி கல்யாணம் பண்ணிக் கொடுப்பாங்க” என்று பழனி கூறுவதாக நாடகத்தில் காட்டப்பட்டுள்ளது. சுபநிகழ்வுகள் நல்ல நாள் பார்த்து வைக்கும் வழக்கம் இருப்பதையும் அழுக்குப்படாத அழகு நாடகத்தில் கூறப்பட்டுள்ளது. "அடுத்த வாரமே ஒரு நல்ல நாள் பார்த்து வெத்தில பாக்கு கை மாத்திப்போம்" என்று சுந்தரமூர்த்திக் கூறுவதன் மூலம் அறியலாம்.

**அதிகார வர்க்கம்**

பணம் பதவி என்ற ஆணவத்தில் ஏழை எளிய மக்களை அடக்கும் முறையை அதிகார வர்க்கத்தின் செயலாக அமைந்துள்ளது. அழுக்குப்படாத அழகு நாடகத்தில் ஹேமாவதி என்ற கதாப்பாத்திரத்தின் அடக்கு முறை கூறப்பட்டுள்ளது. இதில் "என்னோட வைராக்கியம் உனக்குத் தெரியும் இதுவரை இந்த ஹேமாவதி இந்த வீட்டை விட்டு யார்கிட்டயும் போய் எதற்காகவும் நின்றது கிடையாது" என்ற கருத்தின் மூலம் ஹேமாவதியின் அதிகாரத் தொனியை அறிய முடிகிறது. நடைபாதை நம்பிக்கை நட்சத்திரம் என்ற நாடகத்தில் பண்ணையார் சச்சிதானந்தன் என்ற கதாபாத்திரம் தன் பணத்தால் எதையும் வாங்க முடியும் என்ற அதிகார எண்ணத்தை வெளிப்படுத்துவார். இதனை "எங்க ஊரக் கூப்பிடு கேவலம் உனக்குத் தான் நான் சொல்றபடி கேட்பீன்னா உனக்கு நல்லது எனக்கு சந்தோஷம் இப்பவும் ஒண்ணும் கெட்டுப் போகலை..... இந்த நூறு ரூபா வச்சுக்க....நா..... சொல்றபடி கேளு" என்று தன் பணக்கார திமிரால் கீரை விற்கும் அழகம்மாவிடம் தவறாக நடக்கும் செயலை அறிய முடிகிறது.

**சாதிச்சிக்கல்கள்**

சாதி என்பது பிறப்பிலடிப்படையிலான தொழிற்பாகுபாட்டினையும் அகமணமுறையினையும் கெட்டியாகக் கொண்டு ஏற்படுத்தப்பட்ட மக்களின் குழுக்களைக் குறிக்கும் சாதி மாற்றி திருமணம் செய்வது ஏற்காத மக்கள் இன்றும் இருக்கிறார்கள். 'உறவுப்பின்னல்கள்" என்ற நாடகத்தில் நாட்டு வைத்தியர் என்பவர் "நான் கொஞ்சம் அந்தக் காலத்து ஆளு..... பையன் வேற ஜாதி.. கிராமத்து வாழ்க்கைக்கு இந்தக் காதல் கல்யாணம் ஒத்துவராது" என்ற கூற்றிலிருந்து சாதி மாற்றி திருமணம் செய்வதை ஏற்கவில்லை என்பதை அறிய முடிகிறது. காலத்திற்கு ஏற்றார் போல் மக்கள் மாறி வருவதையும் நாட்டு வைத்தியர் கூறுவதில் இருந்து தெரியவருகிறது."என்னோட மனநோய்க்கு மருந்து தந்து குணமாக்கிட்டீங்க" என்ற கருத்தின் மூலம் சாதி பார்ப்பதை மனநோய்க்கு நிகராகக் கூறுவதை அறிய முடிகிறது.

**பெண்களின் நிலை**

இலக்கியம் அறிவியல் கலை கல்வி மற்றும் அரசியல் போன்ற எல்லாத்துறைகளிலும் பெண்கள் முன்னேற்றம் அடைந்துள்ளனர். அழுக்குப்படாத அழகு என்ற நாடகததில் வரதட்சனை கேட்கும் குடும்பத்திற்கு எதிராக செயல்படும் மனதைரியம் எடுத்துக்காட்டப்படுள்ளது. இதில் திவ்யா என்ற கதாபாத்திரம் அந்த "ஹேமாவதி அம்மா.... கார்கேட்டு எழுதின கடிதத்தை ஜெராக்ஸ் எடுத்து எங்க அலுவலகத்திற்கு எல்லோருக்கும் அனுப்பப்போவதாகவும் இப்படிப்பட்ட பணப் பேய்க்கு யாரும் பெண் கொடுக்காதீங்கன்னு அலுவலகத்திலேயே பேசப்போறேன். வரதட்சனை கேட்கிறவன் சமுதாயத்துல தலைகுனிவோட தான் வாழணும்ங்கிற நிலைமையைக் கொண்டு வரப்போறேன்"

என்றும் ஒதுங்கி ஒதுங்கி போற பெண்கள் சமுதாயத்தை ஓங்கி ஓங்கி மிதிக்கிற பணத்தாசை பிடித்த ஆண்வர்க்கத்திற்கு கொடுக்கிற மரண அடி இது" என்று வரதட்சனை கேட்கும் ஆண்வர்க்கத்திற்கு எதிராக செயல்படும் திவ்யாவின் மனதைரியத்தை அறிய முடிகிறது.

வறுமையிலும் நேர்மையாக வாழும் அழகம்மாவின் செயலை நடைப்பாதை நம்பிக்கை நட்சத்திரம் நாடகத்தில் கூறப்பட்டுள்ளது. அழகம்மா தெருத்தெருவாகச் சென்று கீரை விற்றுக் கொண்டிருக்கிறார். பண்ணையார் சச்சிதானந்தம் அவரது ஆசைக்கு இணங்க 100 ரூபாய் கொடுத்தப் போது அதனை மறுத்து "கீரை விக்கிறவதானே... கூப்டா வந்திருவான்னு கிள்ளுக்கீரையா நெனச்சுட்டியா" என்ற கருத்தின் மூலம் ஏழையாக இருந்தாலும் தன் மானத்திற்கு மதிப்பு கொடுக்கும் பெண்ணின் மனநிலையை அறிய முடிகிறது.

**பிறருக்கு உதவும் மனப்பான்மை**

அழுக்குப்படாத அழகு என்ற நாடகத்தில் திவ்யாவின் மாமன் மகன் பழனி, திவ்யா திருமணத்திற்கு உதவி செய்கிறான். "நானும் ஒரு லட்சம் புரட்டித்தர்றேன்" என்ற கருத்தின் மூலம் அவனது உதவும் மனப்பான்மை அறிய முடிகிறது. அதைப்போல் நடைப்பாதை நம்பிக்கை நட்சத்திரம் என்ற நாடகத்தில் ஏழை குழந்தைகளுக்கு காப்பகம் கட்ட வேண்டும் என்ற சுசீலா என்ற கதாப்பாத்திர மனநிலை கூறப்பட்டடுள்ளது. "நம்ம ஊரில் இந்த மாதிரி உழைக்கும் பெண்களுக்காக அவர்களின் குழந்தைகளின் நலனுக்காக ஒரு காப்பகம் கட்டலாம்னு நினைக்கிறேன், என்ற கருத்தின் மூலம் சுசீலாவின் பிறருக்கும் உதவும் மனப்பான்மை அறிய முடிகிறது.

உறவுப் பின்னல்கள் என்ற நாடகத்தில் டாக்டருக்கு உதவும் சரஸ்வதியின் மனநிலைக் கூறப்பட்டுள்ளது. "எங்க கிராமத்துல வேலைக்கு வந்தப்போ நான் ஓடி ஓடி உதவி செய்தது கூட என்னோட சுயநலத்திற்காகத்தான் ஏன்ன எங்க அம்மா.... சரியான மருத்துவ உதவி கிடைக்காததால் 40 வயசுல அநியாயமா செத்துப் போயிட்டாங்க அதனால் ஊரில் உள்ளவர்களுக்கு இந்த நிலை வரக்கூடாது என்று நினைக்கும் சரஸ்வதியின் மனநிலை கூறப்பட்டுள்ளது. டாக்டர் கோபால் "மனுசனுக்கு மனுசன் உதவி செய்றது, பெரிய விஷயமா? என்னால முடிஞ்சதத்தான் செஞ்சிருக்கேன்." என்று ஊருக்கு நல்லது நினைக்கும் கதாபாத்திரமாக இந்த நாடகத்தில் வருகிறான்.

**ஏழையின் மனவுறுதி**

ஏழைகள் வறுமையிலும் நேர்மையாக வாழும் மனநிலை நடைப்பாதை நம்பிக்கை நட்சத்திரம் என்ற நாடகத்தில் அழகம்மா கீரை விற்கும் பெண்மணி சுசீலாவிடம் கீரைவிற்கும் போது "கட்டு ரெண்டு ரூபா.... நீங்க ஒண்ணரை ரூபா கொடுங்க.." என்ற வரிமுலம் அழகம்மாவின் வியாபார உத்தி அறிய முடிகிறது. மேலும் ஏழை எளியவருக்கு மானமும் மரியாதையும் முக்கியம் என்பதையும் இந்த நாடகம் எடுத்துரைக்கிறது. "உழைச்சுப் பிழைக்க கை கால் இருக்கு மனசுல தெம்பு இருக்கு எங்க போனாலும் வாழ்ந்துருவோம்" என்ற கருத்தின் மூலம் ஏழை மக்கள் உழைத்து வாழும் மனவுறுதி உடையவர்கள் என்பதை அறிய முடிகிறது.

**முடிவுரை**

அழகு உழைப்பிலும் அடுத்தவர்களுக்கு உதவுவதிலும் தான் உள்ளது என்பதை

அழகுக்குப்படாத அழகு என்ற நாடகம் உணர்த்துகிறது. வசதி படைத்தவர்கள் ஏழை எளிய மக்களை கிள்ளுக்கீரையாக மிதிப்பதையும், ஏழையின் உழைக்கும் மனவுறுதியையும், தன்மானத்தையும் சுசீலாவின் காப்பகம் கட்டும் மனநிலையையும் நடைப்பாதை நம்பிக்கை நட்சத்திரம் என்ற நாடகம் காட்டுகிறது. உறவுப் பின்னல்கள் உண்மையிலேயே பல வாழ்க்கைப் பிரச்சனைகளின் பின்னல் தான். ஆனால் சிக்கல் இன்றிப் பிரச்சனைகளை கதாநாயகன் தீர்த்து வைக்கிறான். இளநீர் விற்பவன் இந்நாடகத்தின் முக்கியத் திருப்பு முனைக்குக் காரணமாகிறான். இந்த மூன்று நாடகமும் சமுதாயத்தில் நடக்கும் யதார்த்த சிக்கல்களை முன்வைக்கும் நாடகமாக அமைந்துள்ளது.

**துணை நூற்பட்டியல்**

1. பெ. சுயம்பு,  தமிழ் இலக்கிய வரலாறு
2. மா.கமலவேலன்,  அழுக்குப்படாத அழகு
3. சு. சக்திவேல், நாட்டுப்புற இயல் ஆய்வு
4. https://en.wikipedia.org
5. https://www.tamilvu.org